தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.49/மா/2022**
**நாள்.31.05.2022**

திரு. R. மயில்சாமி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம்–01, மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5-ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 05.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.05.2022 அன்று பெறப்பட்டு 49/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5-ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 05.05.2022 நாளிட்ட தனது மனுவில், " நான் கடந்த வருடம் 07.10.2021 தேதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப்பிரிவு அலுவலகத்திற்கு இணையதளம் வழியாக மின் மயானம் விளாங்குடியில் அமைப்பதற்கு கோரிக்கை மனு அனுப்பியிருந்தேன். மதுரை மாநகராட்சி, புது வார்டு, 1 பழைய வார்டு 23ல் மின் மயானம் அமைப்பதற்கு எனது வேண்டுகோளை ஏற்று மதுரை மாநகராட்சி ந.க.எண்.337/2021 நாள்.23.11.2021ல் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இது குறித்து எனக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று, உதவி ஆணையாளர், மண்டலம்–1 கூறியுள்ளார். இது உண்மைக்கு புறம்பாக உதவி ஆணையாளர், மண்டலம்–1 தெரிவித்து உள்ளார். எனக்கு இது குறித்து இதுநாள் வரையிலும் எந்த கடிதமும் வரவில்லை. எனக்கு கடிதம் அனுப்பியதாகவும் பொய்யான தகவல் வழங்கிய உதவி ஆணையாளர், மண்டலம்–1

அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தும், மாண்புமிகு முதல் அமைச்சர் தனிபிரிவு மனுவை ஏற்றுக்கொண்டு இன்று வரை மதுரை மாநகராட்சி பழைய வார்டு 23, புதிய வார்டு 1ல் மின் மயானம் அமைக்காத உதவி ஆணையாளர், மண்டலம்–1 மதுரை மாநகராட்சி அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தும், பல்லாயிரக்கணக்கான மக்களின் கோரிக்கையான எங்கள் பகுதியில் விரைவாக மின் மயானம் அமைக்க மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி, மண்டலம்–1 அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 18.05.2022 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோரப்பட்ட நிலையில் மனுதாரர் மற்றும் உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி மண்டலம் –1 ஆகியோர் 24.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 17.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

3) மனுதாரர் 24.05.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

4) மதுரை மாநகராட்சி உதவிப்பொறியாளர் 24.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சியில் 2021–22 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் பழைய வார்டு எண் 2 புதிய வார்டு எண் 19ல் உள்ள ஆனையூர் பொது மயானம் மற்றும் பழைய வார்டு 49 புதிய வார்டு எண் 54க்கு உட்பட்ட நாகனாகுளம் பொது மயானம் ஆகிய இரு இடங்களில் மொத்தம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள பழைய வார்டு 23, புதிய வார்டு எண் 20க்கு உட்பட்ட விளாங்குடி பகுதிக்கும், மேற்கண்ட ஆனையூர் பொது மயானத்திற்கும் உள்ள இடைப்பட்ட தொலைவு சுமார் 2 கிலோ மீட்டர் ஆகும். இருந்தாலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள விளாங்குடி பகுதியில் மின் மயானம் அமைக்க மாநகராட்சியால் தேவையான நடவடிக்கைகள் 2022–23 நிதியாண்டில் எடுக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் விதிகளுக்குட்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாநகராட்சி உதவி ஆணையாளர், மண்டலம்–1 அவர்களின் 23.05.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல் விளக்கமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி மண்டலம்–01 தனது 23.05.2022 நாளிட்ட அறிக்கையில் " மதுரை மாநகராட்சி மண்டலம் 1 பழைய வார்டு 23, புதிய வார்டு எண்.20க்குட்பட்ட விளாங்குடி பகுதியில் மின்மயானம் அமைக்கக் கோரிய திரு. R.மயில்சாமி என்பவரின் மனுவிற்கு விளாங்குடி பகுதியில் எரியூட்டு மயானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என எனது முன்னவரால் 21.11.2021ல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது, இந்நிலையில் மேற்படி கடிதம் மனுதாரருக்கு கிடைக்கப்பெறவில்லை என்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 1, பழைய வார்டு 23 புதிய வார்டு 20க்குட்பட்ட விளாங்குடி பகுதியில் முந்தைய உள்ளாட்சி நிர்வாகம் வசம் பெறப்பட்ட பொது மயானம் தற்போது வரை உபயோகத்தில் உள்ளது. இம்மயானம் போன்று சுமார் 1.50 ஏக்கர்

பரப்பளவிற்கு மேல் உள்ள மயானங்களை நவீன எரிவாயு தகன மேடையாக மாற்ற உத்தேசிக்கப்பட்டு அரசு நிதி ஒதுக்கீடு கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு நவீன எரிவாயு தகன மேடை அமைத்திட தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி வசம் விபரம் கோரப்பட்டதன் பேரில் மதுரை மாநகராட்சியிலிருந்து பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டதன் பேரில் முதற்கட்டமாக 2021–22ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் பழைய வார்டு எண் 2, புதிய வார்டு எண்.19ல் உள்ள ஆனையூர் பொது மயானம் மற்றும் பழைய வார்டு எண்.49, புதிய வார்டு எண்.5க்குட்பட்ட நாகனாகுளம் பொது மயானம் ஆகிய இரு இடங்களில் தலா 150.00லட்சம் (மொத்தம் 3.00 கோடி) ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடுகள் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது பணி துவங்கும் நிலையில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக வரும் நிதியாண்டில் விதிகளுக்குட்பட்டு மனுதாரரின் கோரிக்கை மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற விரிவான கடிதம் மீண்டும் மனுதாரருக்கு 20.05.2022 அன்று நேரடியாக வழங்கப்பட்டு உரிய ஒப்புகைபெறப்பட்டு உள்ளது என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு , மதுரை மாநகராட்சி, மண்டலம் 01–ஐ சேர்ந்த உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம்–1 உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

- ➢ மனுதாரர் தான் வசிக்கும் விளாங்குடி பகுதியில் மின் மயானம் அமைக்க கோரியுள்ளார்.
- ➢ 21.11.2021–ல் விளாங்குடி பகுதியில் எரியூட்டு மயானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மனுதாரருக்கு மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ➢ மதுரை மாநகராட்சி, மண்டலம்–01, பழைய வார்டு 23, புதிய வார்டு 20க்குட்பட்ட விளாங்குடி பகுதியில் பொதுமயானம் தற்போது வரை உபயோகத்தில் உள்ளது. மேற்சொன்ன மயானம் போன்று சுமார் 1.50 ஏக்கர் பரப்பளவிற்கு மேல் உள்ள மயானங்களை நவீன எரிவாயு தகன மேடையாக மாற்ற உத்தேசிக்கப்பட்டு அரசு நிதி ஒதுக்கீடு கோரி அனுப்பப்பட்டுள்ளது.
- ➢ ஆனையூர் பொது மயானம், நாகனாகுளம் பொதுமயானம் ஆகிய இரு இடங்களில் தலா ரூ.150.00 இலட்சம் (மொத்தம் ரூ.3.00 கோடி ரூபாய்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது.
- ➢ வரும் நிதியாண்டில் விதிகளுக்குட்பட்டு மனுதாரரின் கோரிக்கை மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற விவரமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதை உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையின் பேரில் நேரடி விசாரணைக்கு ஆஜராகாமலும் உரிய காரணங்களை குறிப்பிட்டு தன்னால் நேரில் விசாரணைக்கு ஆஜராக முடியாததற்கு விலக்கு கோரியோ அல்லது மாற்று தேதிகளில் விசாரணையை மேற்கொள்ளுமாறு அனுமதி கடிதம் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கவில்லை. இதுபோன்ற

நடைமுறைகளை இனி வரும் காலங்களில் தவிர்க்குமாறும் தம்மால் அளிக்கப்படும் புகார் மனுக்கள் குறித்து மேற்கொள்ளப்படும் நேரடி விசாரணைகளில் தவறாது நேரில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்படுகிறார். இருந்தாலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள விளாங்குடி பகுதியில் மின் மயானம் அமைக்க முடிந்தவரை உகந்த சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, வரும் நிதியாண்டுகளில் உரிய நிதியை பெற்று விதிகளுக்குட்பட்டு நடவடிக்கையினை மேற்கொள்ள மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதை முன்னுரிமைப் பட்டியலில் (priority list) வைத்து நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப நடவடிக்கை எடுக்க மாநகராட்சி அறிவுறுத்தப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R. மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண். 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புது விளாங்குடி,
மதுரை – 18.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3) உதவி ஆணையர்,
மண்டலம்–1,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்